செ.வெ.எண்: 555 நாள்: 29.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**அமைப்புசாரா தொழிலாளர்களை பதிவேற்றம் செய்யும் பணிகளை மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அமைப்புசாரா தொழிலாளர்களை பதிவேற்றம் செய்யும் பணிகளை ஆய்வு செய்ய மாவட்ட அளவிலான செயலாக்கக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.09.2021) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தால், அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த விவரங்களை பதிவேற்றம் செய்ய e-Shram/NDUW என்ற புதிய வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அமைப்புசாராத் தொழிலாளர்களான கட்டுமானத் தொழிலாளர்கள், புலம் பெயர் தொழிலாளர்கள், வீட்டுப்பணியாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், சுயதொழில் செய்பவர்கள், நடைபாதை வியாபாரிகள், சிறு வியாபாரிகள், ASHA பணியாளர்கள், மதிய உணவு திட்ட பணியாளர்கள், மீன்பிடி தொழிலாளர்கள், MGNREGA தொழிலாளர்கள், செங்கல் சூளைத் தொழிலாளர்கள் மற்றும் இதர அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவுசெய்து பயன்பெறும் வகையில் இவ்வலைதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வலைதளத்தில் 18 முதல் 59 வயதிற்குள்ளான அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவேற்றம் செய்து அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம். இவ்வலைதளத்தில் பதிவு செய்ய தொழிலாளர்கள் ஆதார் அட்டை, வங்கி கணக்கு எண் மற்றும் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் வைத்திருக்க வேண்டும். பதிவு செய்வதற்கான இணையதளம் https://eshram.gov.in தமிழகத்தில் 31.12.2021 -க்குள் 217.96 லட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 10.21 இலட்சம் தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இத்தொழிலாளர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் மூலமாகவோ அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பொது சேவை மையங்கள் மூலமாகவோ தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தொழிலாளர் உதவி ஆணையர் வெ.தங்கராஜு, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சா.சத்தியமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**